## மங்களூர் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) அவர்களின் நடவடிக்கைகள் முன்னிலை : திரு. பி.சிவகுருநதன்.

ந.க.ஆ3/1946 /2020 நாள். .02.2021

பொருள்: மனைப்பிரிவு அங்கீகாரம் – வரன்முறை படுத்துதல் திட்டம் 2017 – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை – மங்களூர் ஊராட்சி ஒன்றியம் மேலக்கல்பூண்டி ஊராட்சி – சர்வே எண்கள்.195/2B ஆகியவற்றில் 1.59 ஏக்கர் (அல்லது) 6450.00 சதுரமீட்டர் பரப்பளவு கொண்ட மனையிடத்தில் அம்மந்துள்ள குடியிருப்பு மனைப்பிரிவில் விற்கப்படாத 29 மனைகளை முறைப்படுத்தி ஆணையிடுதல்.

பார்வை:
1) நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கடலூர் மண்டலம் அவர்களின் செயல்முறை நடவடிக்கை ந.க.எண். 365/2020/கமா நாள்.02.02.2021.
2) அரசாணை எண்: 78, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (UD4(3) துறை நாள்: 04.05.2017.
3) அரசாணை எண்: 172, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (UD4(3) துறை நாள்: 13.10.2017
4) அரசாணை எண்.21 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (UD13) துறை நாள்.05.02.2019.
5) திரு.மா.சிவக்குமார், மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ம–1) அவர்களின் ஆய்வறிக்கை நாள். 20.11.2020.
6) ஊராட்சி தீர்மானம் எண். 42 நாள். 02.12.2020.

--**--

மங்களூர் ஊராட்சி ஒன்றியம், மேலக்கல்பூண்டி ஊராட்சி சர்வே எண்கள்.195/2B ஆகியவற்றில் 1.59 ஏக்கர் (அல்லது) 6450.00 சதுரமீட்டர் பரப்பளவு கொண்ட மனையிடத்தில் அமைந்துள்ள குடியிருப்பு மனைப்பிரிவில் உள்ள அனுமதியற்ற 29 மனைகளுக்கு கடலூர் மண்டல நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.365/2020/கமா நாள்.02.02.2021.–ல் வரன்முறை செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

மேற்படி மனைப்பிரிவு முறைப்படுத்த உள்ளாட்சி நிர்வாகத்திற்கு செலுத்தப்பட வேண்டிய கட்டணங்களை நிர்ணயம் செய்து கடலூர் மண்டல நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடலூர் மண்டல நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் ஆணையின் அடிப்படையில் **திரு.கே.செல்வராஜ், எண்.1/140சி, வடக்கு தெரு, மேலக்கல்பூண்டி கிராமம், திட்டக்குடி வட்டம்**, கடலூர் மாவட்டம் என்பவரால் அமைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவில் மொத்தமுள்ள 29 வீட்டு மனைகளில் தற்போது கீழ்காணும் 29 மனைகள் வீட்டு மனைகளுக்கு மட்டும் வரன்முறைக்கட்டணம் 26.08.2020 அன்று அரசு தலைப்பிலும் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் உள்ளாட்சி நிறுவனத்திற்கு முறைப்படுத்துவதற்காக 19.02.2021 அன்று செலுத்தப்பட்டுள்ளது.

| வ. எண் | மனை எண் | பரப்பளவு (ச.மீ) | வளர்ச்சி கட்டணம் ரூ. 25/– ச. மீ | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|
| 1. | 1 to 29 | 6378.77 | 20000 | 20000 |
| | மொத்தம் | 6378.77 | 20000 | 20000 |

## நிபந்தனைகள்

1) மனைப்பிரிவில் அமைந்துள்ள மனைகள், நீர்நிலைகள், அரசு புறம்போக்கு, திறந்த வெளி ஒதுக்கீடு அடுத்த நிலத்திற்கு வழியாக அமையும் காலிமனை, உத்தேச சாலை மற்றும் Rail Corridors, பொதுப்பாதை மற்றும் நில உச்ச வரம்பு சட்டத்தின்படி உள்ள மனையிடம், அதிக உயர்மின்னழுத்த பாதை கீழ் அமைந்திருக்கக்கூடாது.

2) அங்கீகரிக்கப்பட்ட ஒவ்வொரு மனைக்கும் செலுத்தப்பட வேண்டிய காலி மனை வரி.(Vacant Land Tax) கட்டணங்கள் கேட்பு (Demand Notices) செய்த நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் ஆண்டுக்கு 6% என்ற விகிதத்தில் வட்டியுடன் செலுத்தப்பட வேண்டும்.

3) மனைப்பிரிவு கட்டமைப்பு (Frame Work) செய்த இம்மனைப்பிரிவில் அமையும் மனையின் உரிமையாளர்கள் அவர்களின் மனையை முறைப்படுத்தப்படாமல் இருப்பின் மின்சாரம், தெரு விளக்கு, குடிநீர், கழிவுநீர் வடிகால் அமைப்பு துண்டிக்கப்படும் மற்றும் சாலை வசதி செய்து கொடுக்க இயலாது.

4) மனைப்பிரிவில் அமைக்கப்பட்டுள்ள கட்டிடங்கள் முறைப்படுத்தப்பட்டதாக கருதப்படாது.

5) இம்மனைப்பிரிவின் நிலங்கள் தொடர்பாக மனைப்பிரிவு உரிமையாளர், சார் பதிவாளர் அலுவலகத்திலிருந்து பெற்று சமர்ப்பித்த வில்லங்க சான்றின் சரி தன்மையை உறுப்பினர் செயலர் விழுப்புரம் மண்டல நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் உறுதி செய்து வழங்கிய செயல்முறை ஆணையின் அடிப்படையில் மனைப்பிரிவு முறைப்படுத்தப்பட்டது. இதில் ஏதேனும் தவறுகள் அல்லது ஆவணங்களின் சரிதன்மை குறித்து புகார்கள் கண்டறியப்படின் ஒட்டுமொத்த மனைகளின் அங்கீகாரம் ரத்து செய்யப்படுவதுடன் சட்டபூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

6) இவ்வுத்தரவு விற்பனை செய்யப்படாத 29 மனைகளுக்கு மட்டும் பொருந்தும், ஏற்கனவே விற்பனை செய்யப்பட்ட மனைகளை வரன்முறைபடுத்திட மனை உரிமையாளர்கள் தனியே விண்ணப்பித்திட வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ)
ஊராட்சி ஒன்றியம், மங்களூர்.

இணைப்பு –

1. வரைபடம்
2. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் கடலூர் மண்டலம் அவர்களின் செயல்முறை நடவடிக்கை எண். 365/2020/கமா நாள்.02.02.2021. வழங்கப்பட்ட ஒப்புதல் மற்றும் நிபந்தனைகள்

19.02.21

பெறுநர்–

திரு.கே.செல்வராஜ்,
எண்.1/140சி, வடக்கு தெரு,
மேலக்கல்பூண்டி கிராமம்,
திட்டக்குடி வட்டம் ,
கடலூர் மாவட்டம்

நகல் – மாவட்ட ஆட்சித்தலைவர், கடலூர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
நகல் – உதவி இயக்குநர்(ஊராட்சிகள்), விருத்தாசம் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
நகல் – நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கடலூர் மண்டலம் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.
நகல் – சார் பதிவாளர், தொழுதூர் அவர்களுக்காக அனுப்பப்படுகிறது.
நகல் – ஊராட்சி செயலர், மேலக்கல்பூண்டி ஊராட்சி